எம்.சி.ஓபி.எண் : 8209/2018 தேதி: 04.08.2026

எ.மசா : 1

பெயர் :சிவகுமார்

த/பெயர் : ஷர்மா

வயது : 70

**<u>நீதிமன்ற அழைப்பானையின் பெயரில் சாட்சி முன்னிலையாகினார் முதல் விசாரணை</u>**

நான் Chennai Nanganallur Hindu Mission Health services மருத்துவமனையில் Medical director ஆக பணிபுரிகிறேன். எனக்கு நீதிமன்றத்தால் அனுப்பட்ட அழைப்பாணையின் பெயரில் நான் இன்று ஆஜர் ஆகியுள்ளேன். எனது அடையாள அட்டை தாக்கல செய்கிறேன் அது எமசா1. கலைமணி என்பவர்கான இறப்பு குறித்து நகலை தாக்கல் செய்கிறேன் அது எமசா2.

**<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள எமசாஆ 2 இல் இறப்பு குறிப்பில் செப்டிக் சாக் ஆவணமாக அவருக்கு இறப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால' சரிதான். டாக்டர் எம்.சரவணன்பவான் என்பவர் என்னிடம் காட்டப்படும் மசாஆ 10 மருத்துவ கருத்துரையில் இறந்து போன நபர் செப்டிக் சாக் காரணமாக எங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அது இன்னொரு மருத்துவரால் கொடுக்ப்பட்ட கருத்துரை எங்களது மருத்துவமனைக்கு மேற்சொன்ன கலைமணி மூச்சுத்திணறல் காரணமாகவும் இதய வலி காரணமாகவும் 24.01.2022 அன்று அனுமதிக்கப்பட்டார். 2 நாட்களுக்கு முன்பே அதே பிரச்சனைக்காக அவர் அழைத்து வரப்பட்டார். அவரை உள்நோயாளியாக அனுமதிக்க அறிவுறுத்தினோம். ஆனால் அவர் அனுமதிக்கப்படவில்லை. பிறகு மேற்சொன்ன தேதியில் அதே பிரச்சனைக்காக அனுமதிக்கப்பட்டார் அவர் 3 வருடங்களுக்கு முன்பு இடது இடுப்பு மற்றும் தொடையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அவருக்கு ஏற்கனவே ஆஸ்துமா சர்க்கரை வியாதி மற்றும் இதய நோய் மற்றும் மூளைக்கு ரத்தம் செல்வதில் பிரச்சனை ஆகியவை கடந்த 7 வருடங்களாக இருந்தன. விபத்து சமயத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் மயக்க நிலையில் இருந்தார் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. அவர் 27.10.2018 முதல் 11.01.2019 வரை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரங்களை நான் பார்த்தேனா என்றால் எங்களிடம் அது காண்பிக்கப்படவில்லை. எங்கள் மருத்துவமனையில் அவர் பல்வேறு சிறப்பு மருத்துவ நிபுணர் குழுவால்

சிகிச்சை அளிக்கப்பட்டார். ஆனாலும் அவர் சிகிச்சை பயனின்றி இறந்துவிட்டார். விபத்து காயங்களால் ஏற்பட்ட பிரச்சனைகளால் தான் மேற்சொன்ன கலைமணி இறந்து விட்டார் என்றால் விபத்துக்கும் அவரது இறப்பிற்கும் இடையே 3 வருடங்கள் இடைவெளி இருந்தது. அவருக்கு ஏற்கவே பல்வேறு நோய்கள் இருந்ததால் விபத்தினால் ஏற்பட்ட காயங்களால்தான் அவருக்கு இறப்பு ஏற்பட்டதா என்று என்னால் உறுதியாக சொல்ல இயலாது. அவர் விபத்தினால் ஏற்பட்ட காயங்களால்தான் கலைமணி இறந்திருக்க வாய்ப்பிருக்கிறது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.